gistered as a News
paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷ
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஞூ ஐப்பசிமீ உ௨ (1946 அக்டோபர் 18 வெள்ளிக்கிழமை) [இல ருச

# இப்போது எமக்குவேண்டியது என்ன?

## சுதந்திரம் என்பது யாருக்கு?

### அரசியல் வாதிகளின் அடாத போக்கு

**பட்ட மோகமும் பதவி வேட்டையும் — பாமரமக்கள் மீது பராமுகக் காரணம்!**

### மக்கள் ஆட்சி இனியாவது ஓங்குக

....ஸ்ரீதரன்....

**கண் துடைப்பு**

எங்கள் இலங்கையில் இன்று அதிகாரம் வகித்துள்ள மந்திரசபையினர் ஒன்றில் வடிகட்டின மூடசிகாமணிகள், அல்லது வேண்டுமென்று இந்த நாட்டைக் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் துரோகிகள் என்றே துணிந்து கூறவேண்டும். மந்திர சபையினருடன் மாத்திரம் இக்குற்றச்சாட்டு நின்றுவிடவில்லை இவர்கள், அரசாங்கசபையிலுள்ள அங்கத்தவர்களின் ஆதரவாலேயே தம் பதவிகளில் இருக்கிறார்கள். இந்த அங்கத்தவர்கள் நினைத்தால், இந்த மந்திரிமாரைப் பதவிகளினின்றும் நீக்கியிருக்கலாம். அந்தக் கைங்கரியத்தை இதுவரை இவர்கள் செய்யாதவரை. மந்திர சபையினர் செய்துவரும் அடாக் கருமங்கள் யாவற்றுக்கும், அரசாங்க சபை அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பங்காளிகள்தான் என்பது கூறாமலே விளங்கும் எனவே அடுத்த பாராளுமன்றத் தேர்தற்காலம் நெருங்க நெருங்க, இப்போது இந்தப் "பவிசு" கெட்ட அரசாங்கசபையில், மந்திரிகளாகவோ, சாதாரண அங்கத்தவர்களாகவோ இருப்பவர்கள், பரஸ்பரம் குற்றம் சாட்டுவார்களேயானால், அது வெறும் கண் துடைப்பு. நான் நோகாமல் அடிக்க நீ ஓயாமல் அழு என்று ஈயாத நயவஞ்சகர்கள் கூறிய கதையை நிகர்க்குமன்றி வேறொன்றுமில்லை. ஏகாதிபத்தியம் என்னும் விதையில் ஜெநித்து, முதலாளித்துவம் என்னும் பசளையில் கிளைத்து, அதிகாரமோகம் என்னும் நீரைக் குடித்து, பதவிவேட்டை என்னும் காற்றைச் சுவாசித்துத் தாம் மாத்திரமே உஜ்ஜீவிக்க விரும்பும் இவர்கள் யாவரதும் கும்மாளத்தை ஒரே அடியாக ஒழிக்கவேண்டியது இந்த இலங்கையிற் பிறந்துள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

●

**மீகக் கேவல்நிலைமை**

எங்கள் இலங்கையிலே 15 ஆண்டு காலமாக முக்காற்பங்கு சுயராஜ்யம் அமுலில் இருக்கிறது. இந்த 15 ஆண்டு காலத்திலும் நாம் எந்தவிதத்தில் முன்னேறியிருக்கிறோம்! சுயராஜ்யம் என்றால் என்ன? வெள்ளைத் தோலுடைய அந்நிய அதிகாரவெறி பூண்டோர்போக, கறுப்புத் தோல் உடைய நம்மவர் அதிகாரம் வகிப்பது சுயராச்சியமா? அது சுயராச்சியமல்ல! சுயராச்சியம் என்றால், மக்களால், மக்களுக்காகவுள்ள மக்களின் இராச்சியம்! இந்த இலக்கணத்தின்படி இன்று எங்கள் நாட்டிற் சுயராச்சியம் அமுலில் உண்டா? அப்படி என்றால் லட்சக்கணக்கான மக்கள் அரைநிர்வாணத்துடன் திரியக் காரணமென்ன லட்சக்கணக்கானோர் பட்டினியாய், கப்பலைப் பார்த்துக் கையேந்தி நிற்கக் காரணமென்ன? பல்லாயிரக்கணக்கானோர், ஒதுங்க இடமின்றி மழையில் நனைந்து வெயிலில் உலர்ந்து, பனியில் நடுங்கி வெதும்பி மடியக் காரணமென்ன? எங்கள் நாட்டில் முற்காலத்திலே, பெண்கள் தங்கள் முற்றங்களில் அரிசிமா கொண்டு கோலம் போடுவார்கள். அதன் நோக்கம் என்ன? எறும்பு முதலாம் ஜீவராசிகள் அந்தமாவைப் பொறுக்கிப் புசிக்கவேண்டும் என்ற பெரிய ஜீவகாருண்ய நோக்கத்தால். ஆனால் இன்று அந்த மக்களின் சந்ததியில் உதித்த யாம், கேவலம் எலி "அகிழான்" முதலாம் ஜெந்துக்கள் சேகரித்து வைக்கும் தானியங்களை அபகரிக்கிறோம்! அத்தகைய ஓர் கேவலமான பஞ்ச நிலைக்கு எங்களைக் கொண்டுவந்துவிட்டது எது? "நெஞ்சு பொறுக்குதில்லை இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்" என்று வீரகவி பாரதி எங்களை நினைந்து கூறியமை அத்தனையும்நிச்சயம்!

●

**எர் கடமை**

இந்தக் கொடிய நிலைமை மாறவேண்டும்! இந்த நாட்டுக்கு இந்த நாட்டிற் பிறந்துள்ள ஒவ்வொரு ஆண்மகனும், ஒவ்வொரு பெண்மணியும் உரித்தாளி என்பதை இந்த நாட்டில் உள்ளோர் அனைவரும் உணரவேண்டும். இந்த நாட்டில் உள்ள பரிபாலனம் ஒரு குழுவினர்க்கோ, ஒரு கட்சியினர்க்கோ சொந்தமானது அல்ல என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் இந்நாட்டின் மன்னனாக விளங்க வேண்டும். ஒரு புதிய சகாப்தம் உதயமாக்கவேண்டும். இந்த நாட்டு மக்களில் எவராவது பட்டினியால் வருந்தாது, உடையின்மையால் வருந்தாது, நோயினால் தவிக்காது, முதுமையினால் தளராது இருக்க நாம் வழிவகைகள் தேடவேண்டும். பதினாயிரம்பேர் பட்டினி கிடக்க, அவர்களின் இரத்தத்தை உறிஞ்சி ஒருவன்மாத்திரம் இந்திரபோகம் அநுபவிக்கும் இப்போதைய நிலைமை அறவே ஒழியவேண்டும். எல்லாரும் இந்நாட்டு மன்னராக நின்று "வெற்றி யெட்டுத் திக்கு மெட்டக் கொட்டு முரசே" என்று எங்கள் வீரபாரதியுடன் சேர்ந்து வீரசங்கநாதம் சப்திக்க நிற்கும் நிலைமை ஏற்பட உழைப்போமாக.

# சென்னையில் மதுவிலக்கு

## மீறுவோர்க்குக் கடும் தண்டனை

சென்னை மாகாணத்தின் மூன்றில் ஒரு பகுதியிலே இப்போது மதுவிலக்கு அமுலில் இருந்துவருகிறது. மதுவிலக்குச் சட்டங்களை மீறுபவர்க்கு மிகவும் கடும் தண்டனை விதிக்கப்படுகிறது, சென்றவாரம் திருப்பத்தூர்ப் பகுதியில் ஒருவர் 2கலன் மதுபானம் வைத்திருந்தமைக்காக நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டு 2 வருடக் கடுங்காவற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

எங்கள் இலங்கையிலும் சிலகாலம் மதுவிலக்கு அமுலில் இருந்ததுதான். ஆனால் அக்காலத்தில்தான் இங்கே மதுபான வேட்கை ஜனங்களுக்கு அதிகமாயது. சோர வியாபாரம் அதிகரித்தது. சட்டத்தை மீறியவர்க்கு அபராதம் விதிக்கப்பட்டது. சோர வியாபாரிகள் தாம்பெறும் அபரிமித ஆதாயத்தில் ஓர் பகுதியை அபராதமாகக் கொடுக்கப் பின்வாங்கவில்லை. அவர்கள் தாம் இறுத்த அபராதப் பணத்தைச் சம்பாதிப்பதற்காக மீண்டும் சோர வியாபாரத்தில் ஈடுபட்டுச் சம்பாதித்தனர். இத்தகைய முறைகளினால், எங்கள் இலங்கையிலே மதுவிலக்குப் பங்கப்பட்டுவிட்டது, இப்போது மூலைக்குமூலை வீட்டுக்குவீடு தவறணை! ஆண்பெண் அனைவரும் மதுவரக்கனை வரவேற்கின்றனர்.

இப்படியான குறைகளை எல்லாம் நிவிர்த்திசெய்து மதுவிலக்கை வெற்றியாக்கச் சென்னை மாகாணத்துக் காங்கிரஸ் மந்திரிகள் செய்யும் முயற்சியுடன் அரசாங்க உத்தியோகத்தர் அனைவரும் ஒத்துழைப்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

## தென்மயிலைச் சன்மார்க்க சபை

சென்ற 12-10-46 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் ஷை மண்டபம் அரசாங்கசபைத் தலைவர் சேர். வை. துரைசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின் நியாயவாதி R. R. நல்லையா அவர்களின் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. காங்கேசனதுறைப் பிரதிநிதி திரு. S நடேசன், நியாயவாதி திரு. M. பாலசுந்தரம், நியாயவாதி திரு. S. R. கனகநாயகம், நியாயவாதி திரு. S. H. பேரின்பநாயகம் என்போர் விரிவுரை நிகழ்த்தினர்.

# உலகம் உய்ய வழி

## சகோதரத்துவம் பரவவேண்டும்

ஐக்கியதேச ஸ்தாபனத்தின் உணவு. விவசாயப்பகுதிகளின் பிரதம அதிகாரியும், பிரிட்டிஷ்பாராளுமன்றத்து அங்கத்தவரா யிருந்தவருமான சேர் ஜோன்போயிட் ஓர் என்பார் கீழைத் தேசங்களுக்குத்தான் இனி உன்னத காலம் என்றும், மேல் நாடுகளின் செல்வாக்கு யாவும் வெகு சீக்கிரத்தில் அற்றுவிடும் என்றும் கூறுகிறார். அவர் சென்றவாரம் அமெரிக்காவிற் செய்த ஓர் பிரசாரணத்திற் பின்வருமாறு கூறினார்.

"சென்ற 50 ஆண்டுகளுக்குமுன், கைத்தொழில்கள் யாவும் ஐரோப்பாவிலேயே உந்நத நிலையில் இருந்தன. ஆனால் கடந்த 50 ஆண்டுகளுக்கிடையில் அமெரிக்கா அவ்விஷயத்தில் ஐரோப்பாவை மிஞ்சி உந்நத நிலைக்கு வந்தது. ஆனால் இன்னும் 50 வருஷ காலத்துக்குள் இந்தச் செல்வாக்கு அமெரிக்காவை விட்டகன்று ஆசியாவுக்குப் போய்விடும்.

"ஜப்பான் 50 ஆண்டு காலத்துக்கிடையில் மிகவும் பராக்கிரமம் வாய்ந்த வல்லரசாக வந்தது, ஜப்பானுக்கு அப்படிவர 50 ஆண்டுகள் பிடித்தால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் 20 ஆண்டுகள் போதுமானவை,

"நாம் கறுப்பர்கள் என ஒதுக்கி வைத்திருந்த நீகிரோவர்கள் இப்போது ஓர் புது விழிப்பை யடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகளின் மனோசக்தியும், அபார வன்மையும் எங்கள் நாட்டினருடையவற்றுக்கு எவ்வாற்றானும் குறைந்தனவல்ல.

"பெரிய பராக்கிரமம் வாய்ந்த சக்கராதிபத்தியங்கள் என்ற பேச்செல்லாம் இப்போது மலையேறிவிட்டது. இரண்டு மூன்று வல்லரசுகள் தாங்களே அதிகாரம் வகித்து, ஒன்றைக் கொன்று சளைக்காமல் கருமம் பார்த்ததெல்லாம் இனிப் பழங்கதை, இப்போதுள்ள பிரச்சினை ஒன்றே ஒன்றுதான்; உலகமக்கள் எல்லாரும் ஒத்தால்தான் வாழலாம், இல்லையேல் சர்வ நாசம்தான்!

"இப்போது தேவை என்ன? சமாதான உடன்படிக்கைகளை வெறுங் கடுதாசிகளில் எழுதி ஒப்பம் இடுவதால் ஒருபோதும் சமாதானம் வரமாட்டாது. உலகில் உண்மையான சகோதரத்துவ பாவனை இருக்கவேண்டும். எந்தச் சிறு தேசமாவது அச்சமின்றி வாழ்த்தக்கதாக சமரசப் பான்மை சகல தேயங்களுக்குமிடையே இருக்கவேண்டும். அது இல்லையேல் மீண்டும இந்த உலகம் முன்னொருபோது மில்லாத ஓர் நாசத்தை எய்தும் என்பது நிச்சயம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஷு
ஐப்பசி உ௨ வெள்ளிக்கிழமை

## "வேலை நிறுத்துதல்"

தொழிலாளர்கள், வேறுஎவற்றையுஞ் சிந்தியாது, தங்கள் வேதன வுயர்ச்சியாகிய தம்நயங் கருதும் நோக்க மொன்றையே முக்கியமாகக்கொண்டு ஒருங்கு திரண்டு ஏககாலத்தில் வேலை செய்யாது நிறுத்துதலாகிய இந்தத் துர்வழக்கம் முதன்முதல் மேலைத் தேசங்களிலேயே முளைத்ததாகும். ஆனல் இது காலகதியில் அம்மேலைத் தேசத்தார் பரிபாலனத்தில் அகப்பட்ட கீழைத்தேசங்களிலும் பரவலாயிற்று; எங்கள் தேசத்திலே, நாட்டிலே இப்படியான தொழில் நிறுத்தும் வழக்கம் எக்காலத்தாயினும் இருந்ததாக அறிதற்கு எவ்வகையான ஆதாரமு மில்லையாகும். அது மேலைத் தேசத் தொழிலாளரும், அவர்களைப் பின்பற்றிய கீழைத்தேசத் தொழிலாளரும், தங்கள் அதிகாரிகள் எஜமானரை வெருட்டி அவர்களைக்கொண்டு தாங்கள் நினைத்தபடி செய்வித்தற்கு இந்த வேலை நிறுத்துதலைத் தங்களுக்கு ஒரு வாய்ப்பான கருவியாக வைத்துக்கொண்டதேயாம்; இந்தஆபத்தான ஆயுதத்தைத் தொழிலாளிகள் மாத்திரமல்லாமற் காலகதியில், படித்தவர்கள் விஷயமறிந்தவர்களென் றிருக்கும் அரசாங்க உத்தியோகத்தர் பணவங்கி முதலியவற்றிலுள்ள உத்தியோகத்தர்களும் கையாளத் தலைப்பட்டுக்கொண்டனர்; இவர்கள் மாத்திரமல்லாமல் கௌரவமான தூயதொழிலைச் செய்து வருபவர்களென மதிக்கப்படுபவர்களும், ஏனைய தொழில்களைச் செய்வோர் தம்கல்வி யறிவுக் குறைவினல் யாதாயினும் தவறு செய்யத் தலைப்பட்டால், அவர்களுக்கு இதோபதேசஞ் செய்து அவர்களைத் திருத்தக் கடப்பாடு பூண்டவர்களாகிய உபாத்தியாயர் பகுப்பினரும், "வேலி பயிரை மேயத்தலைப்பட்டவாறு" வேலைநிறுத்துதலாகிய தமக் கடாச் செயலைச் செய்ய முயன்றனர்; ஆனற் செய்திலர்.

இத்துர்ச்செயல் பிருத்தானிய பரிபாலனம், தொழிற்கட்சியினர்பால் மாற்றப்பட்ட பின்னர்த்தான் அதிகமாக முளைத்துவருகின்ற தெனப் பலர் அபிப்பிராயப்படுகிருர்கள். அது இன்னும் அனுபவத்திற் காணக்கிடக்கின்றது; வேலைநிறுத்துதலாகிய தீயசெயல், மக்கள் எதிர்பார்த்திராதபல அநர்த்தங்களை விளைக்கத்தக்கது; வேலைநிறுத்துதலால் விளையும் அநர்த்தத்தின் தாரதௌமியம் அந்தஅந்தத் தொழிலைச் செய்வோரைப் பொறுத்திருக்கின்றது; ஒரு கைத்தொழிற்சாலையிலே வேலைசெய்யுந் தொழிலாளர் ஏகோபித்து வேலை நிறுத்தலைச் செய்தால், அத்தொழிற்சாலையின் அதிகாரிகளும் ஆங்கு ஆக்கப்படும் பொருளைவாங்கி விற்கும் வியாபாரிமாரும், அப்பொருள்களை வாங்கி உபயோகிப்போரும் இன்னும் அதனேடு ஏதும்தொடர் புடையவர்களுமே பாதிக்கப்படுவர்; பணவங்கிகளிலே உத்தியோகத்தர் இலேககர்கள் ஒருங்கு சேர்ந்து வேலைநிறுத்தலைச் செயின், தனவந்தரும் வியாபாரிமாரும் பெரிதும் முட்டுப்பட, ஊரவர்களும் ஒரு அளவிற்குக் கஷ்டப்பட வேண்டியேநேரும்; இற்றைக்குச் சிலஆண்டுகளுக்கு முன் கொழும்புப்பட்டினத்திலே, தங்கள் வேதன வுயர்ச்சியை வேண்டி அப்பட்டினத்தி லுள்ள மலகூடங்களைச் சுத்தஞ்செய்யும் "சக்கிலியர்"கள் வேலை நிறுத்தலைச் செய்ய, இலங்கையின் தலைநகரம் முழுவதும் துர்நாற்றத்தோடும் அழுக்கோடுங் காணப்பட்டதென அந்த நேரத்திற் கேள்விப்பட்ட துண்டு; இவைகளெல்லாம் ஒருபட்டினத்தையும் அப்பட்டின வாசிகளையும் பாதிக்கும் தொழில்நிறுத்தமாகும். ஆனற் சென்ற வருடங் கொழும்பிலுள்ள துறைமுகத் தொழிலாளர் செய்த வேலை நிறுத்தலாகிய செயல், கப்பல்களில் வந்திருந்த உணவுப் பொருள்களைக் கரைக்குச் சேர்க்க ஆட்க ளில்லாமையினல், சில தினங்கள் இலங்கைமக்க ளனைவரையும் பாதிபட்டினியாக்கிவிட்டமை எங்கள் ஞாபகத்தில் இப்பொழுதுமுண்டு.

இவைகளைக் காட்டிலும் சில வாரங்கட்கு முன்னர் கல்கத்தா, பம்பாய், சென்னை முதலிய பட்டினங்களிலே புகைரதப் பகுதித் தொழிலாளர் செய்த வேலை நிறுத்துதல் இந்தியா முழுவதுமுள்ள போதல் வருதல் பண்டம் ஏற்றுமதிசெய்தல் இறக்குமதிசெய்தல் வியாபாரம், பத்திரிகைகளிற் சமாசாரங்களைப் படித்தல் முதலாம் இன்றியமையாக் கருமங்களை யெல்லாம் குழப்பித் தலைகீழாக்கிப் பல அநர்த்தங்களை ஆக்கிவிட்டது; இந்தவேலை நிறுத்தலாகிய தீச்செயல் கையாளப்படும் வரையில் உலகமும் எந்தநேரத்திலும் ஆபத்தையே எதிர்பார்த்த வண்ணம் இருக்க நேரும்.

தொழில்நிறுத்துதலாகிய குற்றத்தின் பொறுப்பு முழுவதையும் நாம் தொழிலாளர்கள் தலையில் மாத்திரம் சுமத்திவிடுதல் நீதியாகாது; நீண்ட கொடிய உலகயுத்தம் காரணமாக இப்பொழுது நேர்ந்துள்ள பஞ்சமும், இப்படித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தலைச் செய்தற்கு ஒரு காரணமென்பதுநிசம்; ஆனலும், வேலைகொள்வோ ராகிய அதிகாரிகட்கும் வேலைசெய்வோராகிய தொழிலாளர்களுக்குமிடையே பரஸ்பரம் நல்லெண்ணமும் நம்பிக்கையு மில்லாமையே, இதற்குப் பிரதான காரணமெனலாம்; "எஜமானனிடத்தில் விசுவாசமுள்ள சேவகனும் சேவகனிடத்தில் தயையுள்ள எஜமானும் [illegible] லரிது" [illegible] வாக்கியமொன்று பஞ்சதந்திரத்திலுண்டு; அதிகாரிகள் எந்த நேரத்திலும் தொழிலாள ரிடத்தில் அவநம்பிக்கை கொண்டவர்களாய் அவர்களுடைய இலாப நஷ்டங்களையிட்டுச் சிந்திக்காதவர்களாய்த் தம்நயத்தையும் புகழையுங் கருதியவர்களாய் நடக்கின்ருர்கள்; இதனல் அவர்களிடத்திலே தொழிலாளிகளுக்குள்ள விசுவாசமும் பயபக்தியுங் கெடுகின்றன; அதிகாரிகள் செய்யும் இன்னலைத் தவிர்த்துத் தாம் ஏதும்சுகம்பெற நோக்கங்கொண்டு "அட்பங் கொடியுந் திரண்டால் மிடுக்கு" என்றபடி தொழிலாளர் தம்தம் குறையைத் தங்களுள் ஒருவரோடொருவர் கலந்துபேசி ஒரே நோக்கத்தோடு ஒற்றுமைப்பட்டு இந்த வேலைநிறுத்தல் என்று சொல்லப்படும் பொல்லாத ஆயுதத்தைக் கையாளத் தலைப்படுகிருர்கள்; அதிகாரிகள் எஜமானர்க ளென்றிருப்பவர்களும், கரும்பிலே சாற்றைப் பெறுதல்போல, இந்த வேலை நிறுத்துதலாகிய ஆயுதத்தைத் தொழிலாளர் கையாளும் வரைக்கும், அவர்கள் காலந்தோறும் இடும் முறையீடுகளுக்குச் செவிகொடார்களாம். இருபகுதியாரும் இப்படி நின்ருல், உலகத்திலே சமாதான வாழ்க்கையும் மனரம்மியமும் செல்வமும் விருத்தியாதல் எப்படி முடியும்?

*

## எங்கள் பட்டினநிலை

மாரிக்காலத்துக்குரிய மழை எங்கள் பட்டினத்திலும பெய்யத் தொடங்கிவிட்டது; யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைத் தெருவீதி முதலிய பெரிய தெருவீதிகள் அதிக குற்றமில்லாமலிருப்ப, குறுக்குத் தெருக்களுள்ளும சிற்சில தெருக்கள் ஒருவாறுபண்படுத்தப்பட்டிருப்ப, ஏனைய சில குறுக்குத் தெருக்கள் கிடக்கும் கிடையும், அவற்ருற் போக்குவரவு செய்யும் மக்களும் வண்டிகளும இரதங்களும் படும்பாடு பரிதாபமாகும். உதாரணமாக, ஒரு குறுக்குத் தெருவைச் சொல்லுகின், வண்மேற்கு சிவலிங்கப்புளியடிச் சந்தியிலிருநது ஒட்டுமடத்தடிக்குச் செல்லும் குறுக்குத் தெருவை எடுத்துச் சொல்லலாகும்; இந்தத் தெரு பேரளவிற் குறுக்குத் தெருவெனினும், அராலி வட்டுக்கோட்டை காரைநகர் ஊர்காவற்றுறை அதற்கப்பாலுள்ள தீவுகளிலிருந்து, நல்லூர், கந்தர்மடம், நாயன்மார்காடு முதலாம் பல இடங்கட்கும் தென்மராட்சிக்கும் போகும் மக்கள் கால்நடையிலும், வண்டிகள் இரதங்கள் மார்க்கமாகவும், போதற்கு மார்க்கமாகவுள்ளது இந்தக் கேவலப்பட்ட சிவலிங்கப்புளியடி - ஒட்டுமடத்தடிக் குறுக்குத் தெருவேயாகும். இந்தத் தெருவின் ஒரு பக்கத்திலே தோண்டப்பட்ட கான் கிடக்கவும், மழை வெள்ளம் வழிப்போக்கர்களையும், வண்டிகள் இரதங்களேயுப் பின்பற்றிப்போலும், இந்தத் தெரு மார்க்கமாகவே பாய்ந்துள்ளது; எஞ்சிய வெள்ளம் கானில் இறங்காமல் தெருவிற்ருனே தங்கிக்கொள்ள, அந்த வெள்ளத்தில் நீர் வாழ்வன உற்பவித்துச் சஞ்சரிக்கின்றன; கூலிக்கு மோட்டர் ரதம் விடுவோர் அந்தத் தெருவருகில் வசிப்போர்க்கு ரதம் விடப் பயப்படுகிருர்கள்; காரணம் வேறென்றுமல்ல, குறித்த தெருவில் இரதம் ஓடியபின அதனைப் பழுது பார்க்கக் கொடுக்கும் பணத்திற்கு, [illegible] போதாதென் [illegible]ம்; யுத்தம் தொடங்குமுன் திருத்தப்பட்டதற்கு இந்தத் தெரு இன்னமும் பூரணமாகத் திருத்தப்படவில்லையென்று அத்தெருவோரத்தில் வசிப்போர் சொல்லுகிருர்கள்; இந்தவிஷயத்தில் ஏதுஞ் சந்தேகமிருந்தால், அதிகாரிகளாக, வேறு எவராக நேரிற்போய்ப் பார்க்கலாம்; இரதமூலமாகச் சென்று பார்ப்பதே நன்று; இப்படி இன்னுஞ் சில தெருவிதிகள் இந்தப் பட்டினத்திலுண்டென்று பட்டின வாசிகள் முறையிடுகிருர்கள்.

### வெளிச்சம்

பெரும்பாலும் மாரிக் காலத்திலே ஐப்பசிமாசக் கிருஷ்ண பட்சத்திலே, இருளோடும் மழையோடும் கூடிய இரவில் இப்பட்டினத்தின் வெளிச்சம் தன் வெளிச்சமிடுதலாகிய கடமையைச் செய்யத் தவறிவிடுதல் உண்டு; சில தினங்கட்கு முன் இங்குள்ள வெளிச்ச அலையுதவும் யந்திரசாலையிலுள்ள யந்திரமொன்று டழுதுற்றமையினல், இப்பொழுது இரண்டு மூன்று இரவுகளாகப் பட்டினத்திற்குப் பூரண வெளிச்சமில்லையாக, மின்சார அலையும் அதனல் தொழில் செய்யப்படும் இந்த அச்சியந்திரசாலைபோன்ற சில தொழிற்சாலைகளுக்குக் கிரமமாக உதவப்படல் முடியாதாயிற்று; ஆனல் யந்திரத்தை விரைவிற் பழுது பார்த்துத் திருத்திப் பழையபடி பூரண வெளிச்சத்தையும் மின்சார அலையையும் பட்டினத்திற்கு உதவுதற்காகிய முயற்சிகள் துரிதமாகச் செய்யப்படுகின்றனவென அறியலானேம்; சென்ற ஆண்டிலும் தீபாவலியை அடுத்த இதே காலத்தில் பட்டின வெளிச்சம் சில நாட்களாகத் தவறியமை பட்டினவாசிகளின் ஞாபகத்திலுண்டு.

## புகைரத ஆபத்து?

சென்ற இரவு கொழும்பிலிருந்து புறப்பட்டு இன்று (18-10-46) அதிகாலையில் யாழ்ப்பாணம் புகைரதத் தானத்தையடைய வேண்டிய புகைரதம் இன்னமும் வந்து சேர்ந்திலது; விசாரணையின் பேரில் 6 மணி நேரம் பிந்தி வரக்கூடுமென்றும், அநுராதபுரத்திற்கணித்தாகக் குறித்த புகைரதத் தொடர் தண்டவாளத்தினின்றும் தவறியதால் தடையுற்றதேனவும், இதனற் சேதம் விளைந்ததேனவும் அறியலானேம்: யாழ்ப்பாணப் பகுதியின் உள்ளூர்க் கடிதங்கள் மாத்திரம் இப்பொழுது வழங்கப்பட்டது; அதிகார முறையான விபரம் இன்னமுங் கிடைக்கவில்லை.

### கால நிலை

சென்ற திங்கட்கிழமை தொடக்கம் இங்கே இடையிடையே மழை பெய்து வருகிறது.

### ஸ்ரீ காமராஜ் நாடார்

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்கள் இம்மாதம் 23 ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்வர் என்று அறியக் கிடக்கின்றது. அவர் இங்கே சில நாட்கள் தங்கி யிருப்ப ரென்றும் தெரிகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸி. டீ. ஸி. ஊழல்கள்!

## மேன்மேலும் அம்பலமாகின்றன!

1942-ம் ஆண்டு ஆரம்ப காலத்திலே, இந்த இலங்கையிலே விமானத் தாக்குதல் ஆபத்து அதிகமாயிருந்தது. இப்படியான விமானத் தாக்குதல்களினால் பொருள் நட்டம் உயிர்ச்சேதம், அங்கஹீனம் என்பன பொது மக்களிடையே ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே, அவர்களுக்கு அப்படியான காலத்தில் உதவி செய்தற்கெனத் தருமசீலரான பலர் பெருந்தொகையான பணத்தை உதவிசெய்தனர். இப்பணம் ஸி. டீ. ஸி. என்னும் ஊர்ப் பாதுகாப்பதிகாரி பொறுப்பில் இருந்தன. மேலே சொல்லிய விதமாக ஆபத்து அடைந்தவர்களுக்கு ஷை பணத்திலிருந்து உதவிசெய்ய அவர்க்கு அநுமதியளிக்கப்பட்டது. இந்தப் பணம் எவ்வாறு செலவழிக்கப்பட்டது என்பதனை கணக்குப்பரிசோதனை அதிகாரி ஸ்ரீ கனகரத்தினம் அம்பலப்படுத்துகிறார்:

ஊர்ப் பாதுகாப்பதிகாரியின் காரியாலயத்தில் கடமை பார்த்த சில உத்தியோகத்தர்களது வேதனம் உயர்த்திக் கொடுக்கப்பட்டது. இப்படி உயர்த்திக் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 10000. இப்படி உயர்த்திக் கொடுக்க ஸி. டீ. ஸி க்கு அதிகாரம் இல்லை எனவே கணக்குப் பரிசோதனையின்போது இந்தத் தொகையை நான் அங்கீகரிக்க மறுத்து, திறைசேரிக்கு அறிவித்தேன். இந்தத் தொகை அவ்வளவையும் அதிகப்படியான சம்பளம், உபகாரப் பணம் என்பனவற்றைப் பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட்டுக் கட்ட வேண்டும் என்று திறைசேரி ஸி. டீ. ஸி க்குக் கட்டளையிட்டது.

ஆனால் நடந்தது என்ன? அதிகப்படியாக சம்பளம் எடுத்த அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து 10000 ரூபாவும் அறவிடப்படவில்லை, ஆனால் விமானத் தாக்குதல் உதவி நிதிப் பணத்திலிருந்தே அத் தொகையை ஸி. டீ. ஸி. எடுத்து அரசாங்கத்துக்குக் கட்டினர். இதனைப்பற்றி நாம் கேள்விப்பட்டோம். உடனே ஸி. டீ. ஸி.க்கு ஓர் ஆட்சேபப்பத்திரம் அனுப்பினேம். குறித்த இந்தநிதியிலிருந்து இப்படிச் செல்லக்கட்டியதன் நியாயமென்னவென்றும், இப்படியாக இந்த நிதி இன்னும் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்றும் கேட்டோம்.

விமானத் தாக்குதல் உதவி நிதிக்கும், கணக்குப் பரிசோதனைப் பகுதிக்கும் சம்பந்தமில்லை, எனவே அதனைப்பற்றிப் பேசுதற்கு உமக்கு அதிகாரமில்லை என்று ஸி. டீ. ஸி. மறுமொழி எழுதினர். ஸி. டீ ஸி இப்படிக் கூறியமை பிழை அரசாங்க உத்தியோகத்தர் விஷயமாக நடக்கும் கொடுக்கல் வாங்கல்களைப் பற்றிய சகல தகவல்களையும் விசாரிக்க எனக்குப் போதிய அதிகாரம் உண்டு. எனவே இது விஷயத்தை நான் நிதிக் காரியதரிசிக்கு அறிவித்தேன். குறித்த இந்த நிதி எவ்வாறு துர்விநியோகப்படுத்தப்பட்டது என்பவற்றுக்கான சில ஆதாரங்களையும் நான் நிதிக் காரியதரிசிக்கு அறிவித்தேன். மேலே காட்டியதுடன் இன்னொரு விதமாகவும் இப்பணம் செலவழிக்கிருக்கிறது.

ஓர் உதவி ஊர்ப் பாதுகாப்பு அதிகாரி அரசாங்கத்துக்குரிய ஓர் வீட்டில் குடியிருந்துகொண்டு தனக்கு வீட்டு வாடகைப் பணமாக 2195 ரூபாவையும் பெற்றிருக்கிறார். இது மிகவும் பிழையான விஷயம். இதனை அறிந்ததும், இத்தொகையைச் செலக் கட்டும்படி கட்டளை வந்தது. ஆனால் அந்த அதிகாரி இந்தத் தொகையைச் செல்லக் கட்டவில்லை. விமான விபத்து உதவி நிதியில் இருந்து இத்தொகையை ஸி. டீ. ஸி. கட்டினர்.

இப்படியாகச் செலவழிக்கப்பட்டதெல்லாம் அநியாயம்; இதற்குத்தக்க காரணம் ஸி டீ. ஸி. காட்டவேண்டும் என்று நிதிக்காரியதரிசிக்கு எழுதினேன்.

நிதிக் காரியதரிசியும் என் கூற்றை அங்கீகரித்து, குறித்த நிதி சம்பந்தமான சகல தகவல்களையும் எனக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டார். ஆனால் இற்றைவரை அவருடைய கட்டளைக்கு ஸி. டீ. ஸ.ப் பகுதியார் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை

இன்னொரு விஷயமும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. விமானத் தாக்குதல் உதவி நிதியைக் காலந்தோறும் தக்க பகிரங்க பரிசோதனைக்காரரால் பரிசோதித்துப் பொதுஜனங்களுக்கு அதன் நிலைமையைப் பத்திரிகைகள் மூலமாக அறிவிக்கவேண்டும் என்றும் நிதிக் காரியதரிசி ஸி. டீ. ஸி.க்குக் கட்டளையிட்டார் ஸி.டீ ஸி. அப்படிச் செய்யவில்லை. ... உத்தியோகத்தர் ஒருவரைக்கொண்டே அதனைப் பரிசோதிப்பித்தார்.

# துணிகரக் களவு

## ஓடும் புகைரதத்தில் நடக்கும் அக்கிரமம்

சென்ற திங்கட்கிழமையிரவு 7மணிக்குக் கொழும்புக் கோட்டைப் புகைரத ஸ்தானத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்ட புகைரதத்தில் ஓர் துணிகரமான களவு நிகழ்ந்தது என்று அறிகிறோம்.

யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியில் வசிக்கும் மிஸ்ரர் ஜோசப் என்பவரின் மனைவி குறித்த புகைரதத்திற் பிரயாணம்செய்து தனது பிரயாணச் சாமான்களை ஒழுங்கு படுத்திக்கொண்டு நிற்கும்போது புகைரதம் கோட்டை ஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டது. அது மெல்லமெல்லவாசுப் போகையில் அதன் மிதிபலகையில் நின்றுகொண்டிருந்த ஒருவன் ஷை பெண் இருந்த பெட்டிக்குட் சென்று அப்பெண் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியையும் பதக்கத்தையும் திடீர் எனப் பிடுங்கிக்கொண்டு அப்பால் குதித்துத் தப்பிவிட்டான். அவன் மருதானைக்கிடையில் மக்கலம் வீதிவழியாக ஓடினன்,

வடபகுதிப் புகைரதம் கோட்டை ஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டதும் ருகணம்வரை வேறெத் தானத்திலும் நிற்பதில்லை. ருகணத்தில் புகைரதம் நின்றதும் குறித்த பெண் அதிகாரிகளுக்கு முறையிட்டார்.

இந்தத் துணிகரமான களவு நிகழ்ந்த அதேயிடத்தில், இதே புகைரதத்தில் இற்றைக்கு 15 நாட்களுக்கு முன் இதுபோன்ற இன்னோர் களவு நிகழ்ந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படியான அக்கிரமங்களைத் தடுப்பதற்குப் புகைரதப் பகுதியார், ஓர் பாதுகாப்புப் பொலிஸ் படையை இற்றைக்குச் சின்னாட்களுக்கு முன் அமைத்துள்ளனர் அப்பட்டாளத்தை அமைத்ததன் கைமேற் பலன் இதுதானு?

### அன்பு செய்மின!

மானுடருழா விடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டா விடினுமன்றி நீர்பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்
வகை வகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்கு மன்றே?
யானெதற்கு மஞ்சுகிலேன், மானுடரே, நீவிர்
என் மதத்தைக் கைக்கொண்மின்; பாடுபடல் வேண்டா;
ஊனுடலை வருத்தாதீர்; உணவியற்கை கொடுக்கும்;
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்.

—பாரதி.

# தேவஸ்தானங்களுக்குரிய நிதிகள்

## "பொதுக்கல்வியின்பொருட்டு செலவிட விடமாட்டோம்"

தென்னிந்தியாவிலுள்ள தேவஸ்தானங்களில் மேலதிகமாகவுள்ள பணத்தைப் பொதுக் கல்வியின் பொருட்டு எடுத்து உபயோகிக்கலாமென்ற நோக்கம் சென்னை மந்திர சபையினரால் பிரேரிக்கப்பட்டதாம்; இந்த நோக்கத்தை அறவே கண்டித்து, சென்றவாரம் சென்னையிலுள்ள சங்கர மண்டபத்தில் திரு. சோமதேவசர்மா அவர்கள் தலைமையில் ஒரு மகாசபை கூட்டப்பட்டது; தேவஸ்தானங்கட்குரிய பணத்தைப் பொதுக்கல்வியின் பொருட்டுச் செலவிடுவது நல்ல நோக்கமாகத்தானிருந்தாலும், அது இந்து மதங்களின் கொள்கைக்கு நேர்விரோதமானதெனவும், அந்தப் பணத்தை எந்தக் காலத்திலும் சமயதர்மத்தின் பொருட்டும், சமயகுருமார் ஆசிரியர்களுக்கு வேதாகமங்களையும் ஏனைய சமய நூல்களையும் பயின்றுகொள்ளும் வண்ணம் சாஸ்திர பாடசாலைகளைத் தாபிக்கும் பொருட்டும் பழைய தலங்கள் கிலமடையாமற் காலந்தோறும் திருப்பணி செய்து திருத்துதற் பொருட்டும் பல நிர்ணயங்கள் செய்யப்பட்டன.

மேலும் சபைத்தலைமை வகித்த சர்மா அவர்கள் பேசும்போது, தேவஸ்தானங்களால் எஞ்சும் நிதியைச் சமயக் கல்வியின் பொருட்டு விநியோகஞ் செய்வதே யொழிய, சமயக்கொள்கைகளோடு மாறுபடும் பொதுக்கல்வியின்பொருட்டுஉபயோகிக்க விடவொண்ணதென்றும், அப்படி உபயோகித்தலினால் ஆலயத்தாபனங்களுக்கேனும் சமயத்திற்கேனும் எவ்வகையான நன்மையுமுண்டாகாதென்றும், காலந்தோறும் சமயாபிமானங் காரணமாகவே தேவத்தானங்களுக்குப் பொருள் உதவப்படுவனவென்றும், அடியவர்கள் அபிமானிகளுடைய நோக்கத்திற்கும் கொள்கைகளுக்கும் விரோதமாகத் தேவத்தானங்களுக்குரிய மேலதிக நிதியை உபயோகிக்கத் தலைப்பட்டால், இனிமேல் ஒருபோதும் அன்பர்கள் ஆலயங்களுக்குப் பொருளைத் தானஞ்செய்ய மாட்டார்களென்றும், பொருளைக் கோயில்களுக்கு அவ்வக் காலங்களில் உதவியவர்கள் கொண்ட நோக்கத்திற்கு மாறுகச் செலவிடவொண்ணதென்றும், அதிகாரிகளாயுள்ளவர்கள் சமய சம்பந்தமான விஷயங்களில் ஊரவர்களின் கொள்கைக்கு மாறுகக் கட்டளை விதிக்கவும் கருமமாற்றவுந் தலைப்படுதல் தகாத செயலென்றும், ஆலய வழிபாட்டில் நம்பிக்கையுண்ட மக்களனைவரும் சென்னையதிகாரிகள் கொண்ட இந்த நோக்கத்தைத் தடுத்தற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்தே தீரவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசிமுடித்தார்.

# சமரசம் ஏற்படுமா?

## உருளிவெளித் தோட்டப் பிணக்கு

இந்திய அரசாங்கப் பிரதிநிதி திரு எம். எஸ் ஆனேயும் திரு ஆர். டி. சாரியும் விவசாய மந்திரி டி எஸ் சேனநாயகாவைச் சந்தித்து உருளிவெள்ளித் தோட்ட நிலைமையைப்பற்றி கலந்து பேசினர்கள் அதன் பயனாக உருளி வெள்ளி பிரச்னையில் ஒரு சமரச முடிவு ஏற்பட்டு விடலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(1) உருளி வெள்ளித் தோட்டத்திலிருக்கும் தொழிலாளர்களுக்கு வேறு தோட்டங்களில் வேலை கொடுக்க வேண்டும். (2) உருளிவெள்ளி வழக்குகளையெல்லாம் தவிர்த்துவிடுவதோடு இதுசம்பந்தமாக ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்களையும் விடுதலை செய்யவேண்டும் (3) இலங்கை இந்திய பிரச்னையில் ஒரு சமரசமுடிவு ஏற்படும்வரை மேற்கொண்டு தோட்டங்களை விலைக்கு வாங்கி இந்தியர்களை வெளியேற்றும் கொள்கையை அனுஷ்டிப்பதில்லையென்று உறுதி கூறப்படவேண்டும்.

உருளி வெள்ளிச் சம்பவத்தைச் சமரஸ முடிவுக்குக் கொண்டுவர ... வாக்குறுதிகள் திரு ...விடம் கேட்கப்பட்டதாயும் அவற்றின்படிச் செய்ய அவர் சம்மதித்திருப்பதாயும் அறியப்படுகிறது.

இந்த சமரச நிபந்தனைகளைப்பற்றி இலங்கை—இந்திய காங்கிரஸ் தலைவர்கள் உருளிவெள்ளித் தோட்டத் தொழிலாளர்களின் அபிப்பிராயத்தை அறிய விரும்புவதாகத் தெரிகிறது.

## ஜெர்மன் நீர்மூழ்கிகள்

### அவை விளைத்த அநர்த்தங்கள்

ஜெர்மனிய நீர்மூழ்கிக் கப்பல்கள் செய்த நாசவேலை கடைசிவரை ஓயவில்லை ஜெர்மனி சமாதானம் விரும்பிச் சரண்புகுந்த அன்றைத் தினத்திலும் நேசக்கட்சியினர்க்குரிய இருபாரிய கப்பல்களைத் தாக்கி மூழ்கவைத்தன என்று, பிருத்தானிய கடற்படையில் ஓர் தளபதியாக விருந்த H. T டோர்லில் என்பவர் இப்போது தாம் வெளியிட்டுள்ள ஓர் நூலிற் குறிப்பிடுகின்றார்.

இப்போது நடந்து முடிந்த இரண்டாவது உலகயுத்தத்திலே ஜெர்மன் நீர்மூழ்கிகள் 2775 கப்பல்களைத் தாக்கி ஆழ்த்தியிருக்கின்றன. இவற்றில் நூற்றுக்கு 64 விகிதம் அத்திலாந்திச் சமுத்திரத்திலேயே ஆழ்த்தப்பட்டனவாம்.

2775 கப்பல்கள் நேசக் கடற்படையினர்க்குச் சேதமாக, ஜெர்மானியர்க்கு 781 நீர்மூழ்கிகள்தான் சேதமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### அடுத்த ராஷ்டிரபதி

காங்கிரஸ் மகாசபைத் தலைவர் பதவிக்கு இப்போது மௌலானு அபுல் கலாம் அஸாத், ஆச்சார்ய கிருபாளினி என்னும் இருவரதும் பெயர்கள் பிரேரிக்கப்பட்டிருக்கின்றன. மௌலானு அசாத் மீண்டும் காங்கிரஸ் தலைவராக விருக்க விருப்பற்று இருக்கிறர். இருந்தபோதும் நாட்டிலுள்ள நெருக்கடியான நிலைமையில் அவர் இன்னுங் கொஞ்சக் காலம் காங்கிரசின் தலைமைப் பதவியைத் தாங்கி வழிகாட்டவேண்டுமென்று பல பிரபல காங்கிரஸ்வாதிகள் அபிப்பிராயப்படுகின்றனர். பண்டிதர் நேருவின் கருத்தும் அதுவேயென்று அறியக்கிடக்கின்றது. மௌலானு அஸாத் இணங்குவாரேயானுல், ஆச்சார்ய கிருபாலினிபோட்டியிலிருந்து விலகிக்கொள்ளுவர் என்று சொல்லப்படுகிறது.

●

### 'நான் ராஷ்டிரபதியாயிருக்கமாட்டேன்'

ஆனுல் மௌலானு ஆஸாத் இப்போது விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடுவதாவது:—

காங்கிரஸ் மகாசபையின் ராஷ்டிரபதி பதவிக்கு அபேட்சகராக எனது பெயரை நியமனஞ் செய்தவர்களுக்கு நன்றி செலுத்துவதுடன் காங்கிரஸ் ராஷ்டிரபதி பதவியை நான் ஏற்றுக்கொள்ளாது ஏமாற்றமடையச் செய்வது குறித்து விசனிக்கிறேன். இதற்கான காரணத்தை 6 மாதங்களுக்கு முன்பே தெரிவித்துள்ளேன்.

மௌலானு ஆஸாத் தமது அபேட்சையைத் தவிர்க்க கிருபாலினி ராஷ்டிரபதி ஆவார் என்பது திண்ணம்.

●

### ஜின்னுவின் நோக்கம்

ஜின்னு இடைக்கால அரசாங்கத்திற் பிரவேசித்து ஒத்துழைக்க முன்வந்துவிட்டார். எனவே, அவர் தனது ஆட்களாக ஆர் ஆரை அரசாங்கத்தில் நியமிப்பர் என்ற பிரச்னை இப்போது கிளம்பியிருக்கிறது. அநேகமாக ஜின்னு இந்த அரசாங்கத்திற் சேரமாட்டார் என்று நம்பப்படுகிறது. மகாத்மா காந்தி வெளியில் இருந்துகொண்டு எப்படி காங்கிரஸ் மந்திரிகளுக்கு வழிகாட்டுகிருரோ அப்படித் தானும் இருப்பதே ஜின்னுவின் அவா. அதுவுமன்றி பண்டிதர் ஜவஹர்லால் பிரதம மந்திரியாயிருக்க, அவர்க்குக்கீழ் சாதாரண மந்திரியாக இருக்க லீக் தலைவர்க்கு விருப்பமில்லாமலும் இருக்கலாம். முஸ்லிம்லீக் பிரதிநிதிகளாகப் பின்வருவோர் இடைக்கால அரசாங்க மந்திரிகளாகக் கூடும் என்று ஓர் செய்தி கூறுகிறது. மகமத் இஸ்மெயில்கான், காஜா நாஸிமுதீன், அப்துல் ருவ் நிஷ்டர், M. A. H. சந்திரிகர், அப்துல் மதீன்சௌத்ரி.

●

### லீகர்களின் ஆட்கள்

முஸ்லிம்லீக் இடைக்கால அரசாங்கத்திற் பின்வருவோர்களைத் தெரிந்திருக்கிறது என்று பிந்திக் கிடைத்த தந்திச் செய்தி கூறுகிறது:

1 லியாக்கத்அலிகான்
2 சந்திரிகர்
3 அப்துல் ருப் நிஷ்டர்
4 கஸ்னுபர் அலி கான்
5 ஜோசேந்திரநாத் மண்டல்

கடைசியாகக் கூறப்பட்டவர் தாழ்த்தப்பட்டவர் சம்மேளனத்தைச் சேர்ந்தவர்.

●

### மூவர் விலகினர்

லீக் தெரிந்தனுப்பிய ஐவரும் வந்துவிட்டபடியினுல், பின்வரும் அங்கத்தவர்கள் தம் பதவியினின்றும், முன்செய்துகொண்ட ஏற்பாட்டின்படி விலகிக்கொள்ளுவர்:

ஸ்ரீ ஜுத். சரத்சந்திரபோஸ்
டக்ரர் சேர். ஷாபத் அகமத்கான்
மிஸ்ரர் ஸாகீர் அலி

இப்போது கட்சிகளின் நிலைமை வருமாறு:

| | |
|---|---|
| காங்கிரஸ்உயர்சாதிஹிந்துக்கள் | 4 |
| காங்கிரஸ் தாழ்த்தப்பட்டவர் | 1 |
| காங்கிரஸ் முஸ்லீம் | 1 |
| லீக் முஸ்லீம் | 4 |
| தாழ்த்தப்பட்டவர் | 1 |
| பார்ஸி | 1 |
| கிறிஸ்தவர் | 1 |
| சீக்கியர் | 1 |
| ஆக | 14 |

### சேர். ஒலிவர் குணத்திலகா!

இம்மாதம் 20-ம் திகதி ஸேர். ஒலிவர் குணத்திலகா, இலங்கைக்கு வருவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல் இங்கிலாந்திலே அவர்க்கு ஏற்பட்டுள்ளதாகிய தாமசம் காரணமாக அவர் அக்டோபர் மாதம் 26-ம் திகதிக்கு முன் இங்கே வரமாட்டாரென இப்போது தெரிகிறது.

### அரசாங்கசபை அங்கத்தவர் மரணம்

மொரவாக்கைப் பகுதிப் பிரதிநிதியாக அரசாங்கசபையில் அங்கத்தவராகவிருந்த மிஸ்ரர் R. C, கனங்கரா என்பவர் சென்ற திங்கட்கிழமை இரவு தேகவியோகமாயினுர்.

### 'கதர்இயக்கம்' உலகெங்கும் பரவவேண்டும்

'கதர் இயக்கம்' பற்றி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கே, காமராஜ்நாடார் அவர்கள் அகில இலங்கைக் கருணைக்கழகக் காரியதரிசிக்கு எழுதியுள்ள கடிதத்தில், குறிப்பிடுவதாவது:—

"காந்தி ஜயந்தியை சர்க்கா ஜயந்தியென்றே மகாத்மா காந்தி அழைக்கிருர். கதரின் தத்துவம் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

உலகம் ஹிம்சையிலிருந்தும் உலக யுத்தங்களிலிருந்தும் விடுபடவேண்டுமானுல் 'கதர்இயக்கம்' இலங்கை, இந்தியா மட்டுமன்றி உலகெங்கும் பரவவேண்டியது அவசியமாகும்"

—கடித.


# இந்துசாதனம்
## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

**பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)**

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணுர்பண்ணை.


# ஜின்னு சாகிப்!

## துருக்கியில் அவர் பெயரே தெரியாது

ஜனுப் ஜின்னு சாகேப் இந்தியாவில் ஒரு முக்கிய முஸ்லிமாக விளங்கி வருகிறர். அவரே இந்திய முஸ்லிம்களின் ஒரு பகுதியினருக்குத் தலைவராகவும் இருக்கிறர் ஆனுலும் வெளித்தேசங்களில் அதுவும் முக்கியமாக முஸ்லிம்களின் பிரதேசமாகிய துருககியில் அவருடைய பெயரை யாரும் கேட்டதில்லையாம்.

இது சம்பந்தமாக டில்லியில் காந்திஜி வசிக்கும் பங்கி முகாமில் ஒரு ருசிகரமான சம்பவம் நடந்தது. அங்கு ஒருநாள் அயல் நாட்டு நிருபர்கள்—துருக்கிஉள்பட—வந்திருந்தார்கள். மற்றத் தேச நிருபர்களைவிடத் துருக்கி நிருபரிடமே அநேகர் சில கேள்விகேட்கலாயினர். துருக்கியிலிருந்து வந்த நிருபர் காந்திஜியைப் பார்க்க வேண்டுமென்ற வெகு ஆவலுடன் பங்கி முகாமுக்கு வந்திருந்தார். பக்கத்திலிருந்த நிருபர்கள் அவரைநோக்கி, "நீங்கள் ஜனுப் ஜின்னுவைச் சந்தித்தீர்களா?" எனக் கேட்டனர்.

துருக்கி நிருபருக்கு இக்கேள்வி ஒரு விநோதமாகவே இருந்தது. அவரால் ஒரு பதிலும் சொல்லமுடியவில்லை. உடனே மற்றவர்கள் "துருக்கியில் ஜின்னுவைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என வினவினுர்கள். அதற்கு அந்நிருபர், "எங்களுக்கு காந்தியையும், நேருவையும் தான் தெரியும்" என்று உடனே பதிலளித்தார் இதிலிருந்து வெளித்தேசங்களில் முஸ்லிம் லீகைப்பற்றி எவ்வளவுதூரம் தெரிந்திருக்கிறர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்

—ஹனுமான்.

# இலங்கையில் துணிகளின் நிலைமை

இங்கிலாந்து அமெரிக்கா என்னும் நாடுகள் இலங்கைக்கு எதிர்பார்த்த அளவுக்குத் துணிகளை அனுப்பவில்லை மூன்றில் ஒருபங்கு துணிதான் குறித்த நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளன. இப்படியான நிலமையில் துணிக்கட்டுப் பாட்டினை நீக்கவோ, இப்போது கொடுக்கப்படும் துணிகளின் தொகையை அதிகரிப்பதோ முடியாது என தொழில்-வர்த்தக மந்திரி மிஸ்ரர். ராஜாஹீவவித்தாரணை சென்றவாரம் மாத்தறையில் ஓர் கூட்டத்திற் கூறினுர்.

## இறந்தனர்!

புதன்கிழமையிரவு ஜேர்மன் யுத்தக் குற்றவாளிகள் எனக் கண்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட 11 ஜேர்மன் பிரமுகர்களில் 10 பேர் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டனர். கேவலம் சாதாரணக்குற்றவாளியைப் போல் தூக்கில் ஏறிச் சாக விருப்பற்று இருந்தகோயரிங், நஞ்சுண்டு இறந்தார். இவர்க்கு எப்படி நஞ்சு கிடைத்தது என்பது மர்மமாக இருக்கிறது.

### கொச்சியில் மதுவிலக்கு

கொச்சி சமஸ்தானத்திலுள்ள சித்தூர் தாலுக்காவில் மதுவிலக்கைக் கொச்சி சமஸ்தான அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவருமெனத் தெரிகிறது இதற்கான திட்டம் இன்னும் சிலமாதங்களில் உருப்பெறலாம்.

ஆசிரியர் சங்க

# கதம்ப நிகழ்ச்சிகள்

('கானப்ப்ரியை')

வட இலங்கை ஆசிரியர் சென்ற 21-9 46ல் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் தங்களால் ஆனவரை இந்நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஓரளவு திறமைபாகவும் கட்டுப்பாடாகவும் நடத்தியமை மெச்சுதற்குரியதே. இவ்வைபவம் ஆரம்பித்த வரலாற்றையும் ஊக்குவித்தவர்களையும் பற்றி அன்று தலைமை வகித்த அறிஞர் திரு. சு நடேசன் அவர்கள் சொல்லக் கேட்டபோது மனம் ஒருக்கால் 'திகீர்' என்றது. வருடா வருடம் இப்படிக் கொண்டாடவேண்டுமென ஆரம்பித்தவர் தமிழரல்லாத வித்தியாகர்த்தர் ஒருவராம். அதை ஊக்கிக் கேடயம் அளித்தவரும் ஒரு சிங்களக் கனவான்தானும். அவர்கள் இதை ஆரம்பித்து வைத்ததனுற்றுனே நம் சிறுவர் சிறுமியரின் ஆட்டங்களையும் நாட்டியங்களையும் இவ்வளவிலாவது கண்டு களிப்படைகின்றேம். நடனமும் கூத்தும் இசையும் நம்மவர்க்குப புதிதன்று. அவை தமிழரின் பரம்பரைச் சொத்தென்றே கூறலாம் சிலகாலத்திற்கு முன் வந்து தம் நடனக்கலையால் எம்மை மகிழ்வித்த ஸ்ரீ கோபிநாத் - பாலஸரஸ்வதி - சந்திரசேகரன் என்போரைப் பார்த்தபோது நம் சிறுவர் இப்படி ஆடமாட்டார்களா! என ஏங்கியதுண்டு. ஒரு பத்திரிகை வாயிலாகக் கூடக் குறைப்பட்டுக் கொண்டதாக ஞாபகம்

பெற்றேரும் ஆசிரியரும் ஊக்கங் காட்டுதலோடு வெள்ளித்திரையும் வேண்டிய ஊக்கமளித்திருக்கிறது எனலாம். ஆபாஸமான படங்களைப் பார்த்து வாழ்வை அலங்கோலப்படுத்துவதை விட்டு உயர்ந்த கலைப்பண்பும் நோக்கமும் நிறைந்த படங்களைப் பார்த்து வாழ்வை வளம்படுத்துவது மேன்மையானதே.

அன்று 'சிந்தை தெரிந்து வாடி' எனும் பதத்திற்கு அபிநயம் பிடித்த மாணவிக்கு இரண்டாவது பரிசாவது கிடைத்திருக்கலாம். அரங்க பூஜைக்கு ஆதரவேயில்லை. மத்தியஸ்தம் வகிப்பவர்களுக்கு ரொம்பச் சிக்கலான விஷயந்தான். ஆனுல் உண்மையான கலை அம்சத்தை மதிக்கவேண்டியது - உற்சாகப்படுத்த வேண்டியது நம் கடமை.

இன்னொரு விஷயத்தையும் கூறித்தானவேண்டியிருக்கிறது. போட்டியாய் விஷயங்களை நடத்துகிறபொழுது நிகழ்ச்சிகளின் ஒற்றுமை - கலந்துகொள்பவரின் வயது என்பன கவனிக்கவேண்டும். நடனங்களையும் நாடகங்களையும் ஒருமித்துப் போட்டிக்குவிடுவதானுல் நாடகங்களுக்கு இத்தனை பரிசுகள்; நடனங்களுக்கு இத்தனை என்று ஒழுங்கு படுத்த வேண்டும். அப்படியில்லாமல எல்லாவற்றையும் ஒன்ருகப் பார்ப்பது பொருத்தமாகாது. நாம் விடுகிற அடுத்தபிழை என்னவென்ருல் பக்கவாத்திய ஒழுங்கீனமே. எவ்வளவு நன்ருயமைந்த விஷயமும் ஒழுங்கில்லாத பக்கவாத்தியங்களால் கெட்டுப்போகிறது. தவறுது மிருதங்க வாத்தியகாரர் ஒருவர் மேடையில் காட்சியளிப்பது சர்வசாதாரணமாய்விட்டது. தாளத்திற்குப் பாடினுலென்ன - ஆடினுலென்ன தலைவிதியே என்று தட்டவேண்டியதுதான் அவர் கடமை; வாத்தியங்கள் அபஸ்வரமாய் ஒலிக்க வேண்டியதுதான். இதனை எத்தனை நாட்களுக்குச் சகித்துக் கொண்டிருப்பது. நன்முறையில் நாம் முன்னேறிப் போகவேண்டுமானுல் ஒரு வாத்தியகோஷ்டி இருக்க வேண்டும். நிகழ்ச்சியிற் கலந்துகொள்ளும் பாடசாலைகட்குச் சென்று தக்க முறையிற் பயிற்சி கொடுக்கவேண்டும். அல்லது ஏற்ற ஒழுங்கு செய்யவேண்டும். இதைவிட்டு 'ஆட்டத்தன்று மேடைக்கு வாருங்கள் பக்கவாத்தியங்கள் தருவோம்' என்று காரிய நிர்வாகஸ்தர் சொல்ல ஒப்புக்கொண்டு அங்கு போய் அவஸ்தைப்படும் அலங்கோலத்தைத் தானிதுவரை பார்த்திருக்கிறேம். இந்நிலைமையை இப்படியே விட்டுக்கொண்டிராமல் சீராக்குவதுதான் நன்மை பயக்கும். நிகழ்ச்சிகளையும் சீர்ப்படுத்தி விழாக்களோ கதம்பக் கச்சேரிகளோ நிகழ்த்தலாம். போட்டியும் வைக்கலாம். வருடா வருடமோ ஆண்டுக்கிருமுறையோ வைப்பது நல்லது ஒருமுறை எல்லாம் நடனங்களாகவும் மறுமுறைகளில் நாடகங்கள் சங்கீதக் கச்சேரிகளாகக் கூட இருக்கலாம். ஒரு சிலர் மட்டுமின்றி பலர் தம்மை விட்டுக்கொடுத்து பரந்த நோக்கோடு சேவை புரியின் நாடு நலம் பெறுவதற்கும் சனசமூகம் உயர்வதற்கும் தடையென்ன! ஓரளவாயினும் தமிழாசிரிய சங்கம் தங்கள் கடமையை யுணர்ந்து தொண்டாற்றுவதை நாம் மதிக்கவேண்டும் இன்னும் வளர்ந்து சிறந்த சேவைகள் செய்ய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்—120)

**"இரண்டுபேரையும் இட்டுத்தான்போலும்"**

இராமச்சந்திரன் இங்கிதம் இருக்குமிடத்திற்குச் சென்றபோது, அங்கே இரஞ்சிதமும் உடனிருந்தாள்; அவன் வரவைக் கண்ட மாத்திரத்தே இருவரும் இருக்கைவிட்டெழுந்தனர்; "வாருங்கள் அண்ணு, இப்படி உட்காருங்கள்" என்று இன்சொற்கூறி இங்கிதம் இராமச்சந்திரன் இருக்கும்வண்ணம் ஒரு நாற்காலியைச் சமீபத்திற் கொண்டுபோய் இட்டு, அவனை இருக்கச் செய்ய, இரஞ்சிதம் ஒருபுறத்தே ஒதுங்கி நின்றாள்; இராமச்சந்திரன் முதல் இருவரையும் நோக்கி "உங்களை உட்காரச் சொல்லிக் கேட்பதிற் பயனில்லை; நீங்களெனிலோ ஒருபோதும் உட்காரமாட்டீர்களென்பதை நான் அறிவேன்" என உபசாரமாகச் சொல்லிவிட்டு, பின்னர் இங்கிதத்தை அன்புடன் நோக்கி, "என் அருமைத் தங்காய், இருவரும் ஒரு வயிற்றிற் பிறக்கவில்லையே யென்ற குறையொன்றேயொழிய, நாங்களிருவோமும் உற்ற சகோதரங்களென்பதிற் சந்தேகமில்லையே" என்று சொல்லி முடிவதற்கிடையில் 'எள்ளளவும் இல்லையண்ணு; அந்த உண்மையை எங்கள் மனமறியும், தெய்வமறியும்" என்று பணிவுடன் சொன்னாள் இங்கிதம்; "ஏதோ, தமயன் தங்கைக்குச் சொல்லவேண்டிய அந்தரங்க விஷயமுண்டுபோலும், அப்படியானுல் நாம் இந்த இடத்தில் நிற்பது அழகல்ல" என்றெண்ணிக்கொண்டு இரஞ்சிதம் மெல்ல அந்த இடத்தைவிட்டு நழுவ முயலுதலும், அதனைக் குறிப்பாலுணர்ந்த இராமச்சந்திரன் "தங்காய், நீங்களிருவிரும் நிற்கும்போதுதான் ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்லலாமென எண்ணி வந்தேன்" எனலும், அந்த இடத்தை விட்டகல முயன்ற இரஞ்சிதம் புன்முறுவல் பூத்தபடி பேசாது மீண்டும் அப்படியே நின்றாள்; இதனை அவதானித்த இங்கிதம் "இருந்தபடியே துறவியாயிருந்துவிட்டால் இப்படியெல்லாம் கூச்சப்பட வராதே" என்று புன்னகை யரும்பியபடி புகலுதலும், 'ஆரை? அம்மா, என்னைக் குறித்துச் சொல்லுகிறீரோ? இல்லையேல் உம்மையிட்டுச் சொல்லுகிறீரோ" என்று புன்சிரிப்புடன் வினவினுள் இரஞ்சிதம்; "இரண்டு பேரையும் இட்டுத்தான் போலும்" என்று சிரித்தவண்ணஞ் சொன்னுன் இராமச்சந்திரன்.

**"எவ்வகையான குறையுமில்லை"**

"தங்காய், உம்முடைய பெற்றூர் உமக்குச் சொல்லவேண்டிய விஷயங்களைநான் சொல்லவும், அவர்களுக்கு நீர்சொல்லவேண்டியவிடையை நான் கேட்கவும் வேண்டி ஏற்பட்டிருக்கிறது; அதுவும் நான்செய்த பாக்கியந்தான்; என் அபிமானத் தந்தையாரும் இவ்விஷயமாக என்னையே உம்முடன் நேரிற் கண்டு பேசி யோசிக்கச் சொன்னுர்: அதனுற்றுன் இப்பொழுது இங்குவந்தேன்; உம்மிடத்தில் என்னைக்காட்டிலும் அன்பூண்டவர்களும் பக்கலில் நிற்கும் இந்தச் சமயத்திலேயே நான் சொல்லவேண்டிய விஷயத்தைச் சொல்லி உம்முடைய நோக்கத்தை அறிதல் உசிதமாகும்; தங்காய், இங்கிதம், உம்முடைய பெற்றூர் உற்றூர் உறவினர் அயலாரென்னுமிவர்கள் இந்த இடத்திலேயில்லையேயென்ற ஒரு குறையல்லாமல் உமக்கு இங்கே வேறு எவ்வகையான குறையுமில்லையென்று நினைக்கிறேன்..." என்று சொல்வதற்கிடையில் இங்கிதம் அவனைப் பார்த்து 'அண்ணு, இடையிற் குழப்பிப் பேசுகிறேனென்று குறை யெண்ணுதீர்கள்; பெற்றூர் உற்றூர் அயலாரில்லையென்ற குறையும் இங்கே எனக்கில்லை; உங்களைப்போன்றஉற்றசகோதரமும் இங்கு நிற்கும் இரஞ்சித அக்காபோன்றஉடற்பிறப்பும்பெரிய ஐயா போன்ற தகப்பனும் இப்பொழுது இங்கு வந்து தங்கியிருக்கும் விசாலாட்சி அவருடைய கணவன் இவர்கள் போன்ற உறவினரும் இருக்கும்போது எனக்கு என்ன குறை' என்று கூறினுள்

**'தாவிப் படரக் கொழுகொம்பிலாத தனிக் கொடிபோல்......"**

"தங்காய், நீர் இப்படி மனரம்மியத்தோடிருத்தல் எனக்கும் ஆநந்தமாகும்; நிற்க ஒரு விஷயம் சொல்லுகிறேன்; அவதானமாகக் கேட்கவேண்டும்; பெண்பாலார் அவர்களுள்ளும் உங்களைப்போன்ற யௌவனத்தோடும் பேரழகோடுங்கூடிய பெண்கள் நீடித்தகாலம் ஒன்றியாய் இருத்தல் முடியாது: ஒருவாறு ஒன்றியாய்க் காலங்கழிக்கக்கூடிய மனத் திடமுண்டாகி இளம் பெண்கள் அங்ஙனம் காலங்கழிப்பினும், பொல்லாத உலகம் இல்லாத பழியெல்லாஞ் சொல்லும்; மேலும் பெண்பாலாரை மெல்லியர் என்றும் மெல்லிதல்லார் என்றும் பெண்கொடி யென்றும் கொடிபோன்ருரென்றும் சொல்வது இயல்பாகவே அவர்களிடத்தமைந்த மெல்லிய இயல்புபற்றியேயாம்; ஆண்களும் பெண்களும் சமத்துவமுடையரெனச் சாதிக்க முயலும் ஆங்கிலரும் பெண்பாலாரை அபலைகள் (Weaker Sex) என்னுங்கருத்துள்ள தொடர் மொழியால் வழங்குதலைப் படித்திருக்கிறோம்; கொடிகள் படர்ந்து பூத்துக் காய்த்துப் பயன்றருதற்கு எப்பொழுதும் கொழுகொம்பு வேண்டும்; கொழுகொம்பில்லாத கொடிகள் என்றுல் நிலத்திலே படர்ந்து அதிக பயன்றரும் இல்லையேற் சமீபத்திலே நிற்கும் மரங்களிலே சுற்றிப் படரும்; "கொடிகள் கிட்டவுள்ள மரங்களிற் படருகின்றன" என்பது பஞ்சதந்திரம்: "துணையேதுமின்றித் தாவிப்படரக் கொழுகொம்பில்லாத தனிக்கொடிபோற் - பாவித் தனிமனந்தள்ளாடிவாடிப் பதைக்கின்றதே" என்று பெரியோர்கள் கூறியிருக்கிறூர்கள்; ஆதலினுலே மெல்லியலாரென்று சொல்லப்படும் நீங்கள் இன்னமும் விவாகமின்றி யிருத்தல் முறையாகாது..." என்று இப்படி இராமச்சந்திரன் சொல்வதற்கிடையில், இவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டு நின்ற இரஞ்சிதம் இங்கிதத்தை விளித்து, "என்னடியம்மா இங்கிதம்! உங்கள் அண்ணர் ஒரு கண்ணியிற் பல குருவிகளை அகப்படுத்த முயல்கின்றவர்போற் பேசுகின்றூர்" என்று புன்னகையரும்பப் புகல, "உலக நீதி எல்லாருக்கும் ஒத்ததாகத்தானே இருக்கும்" என்று புன்முறுவலோடு சொன்னுன் இராமச்சந்திரன்; இருவரும் படர்க்கையில் வார்த்தையாடும சித்திரத்தை நினைந்து இங்கிதமுஞ் சிறிது சிரித்தாள்; பின்னரும இராமச்சந்திரன் இங்கிதத்தை அன்புடன் நோக்கி, "தங்காய், நீர் சற்று முன்பு உம்முடைய வாயினுலேயே உமக்கு இப்பொழுது எவ்வகையான குறையுமில்லையென்று சொன்னீர்; அது நிசமென்பதை நானும் ஏற்றுக்கொள்ளுகிறேன்; ஆனுலும் இன்னும் ஒரு குறையிருக்கிறது: அதனை நீர் இன்னமும் உணர்ந்துகொள்ளவில்லை என்பது உண்மை; அக்குறையுந் தீர்ந்துவிட்டால் உமக்கு எவ்வகையான குறையுமில்லை [illegible] என்று சொல்ல, "என்னை [illegible] குறை என்ன அண்ணு" என்று ஆவலுடன் கேட்டாள் இங்கிதம்; "வேறொன்றுமல்ல, என் அபிமானத் தந்தையாரும் நானும் உம்மை ஒரு தக்கவரனுக்கு மணஞ் செய்துவைக்க நோக்கங் கொண்டோம்; அதனையிட்டு உம்முடன் பேசும்படியாகத்தான் தகப்பனுர் கட்டளைப்படி இப்பொழுது நான் இங்கே வந்தேன்" என்று சொல்லி முடிவதற்கிடையில், மடம், நாணம், அச்சம் என்னும் மூக்குணங்களும் மீதூர இங்கிதம் இரஞ்சிதத்திற்குச் சமீபமாகப் போய் நிலத்தைப் பார்த்தவண்ணம் நின்றுள்: அவளுடைய கண்களில் நீர் ததும்பியது: பின்னர் அவள் இரஞ்சிதத்தைச் சஞ்சலத்துடன் பார்க்க, இரஞ்சிதம் தன் முன்றுனையால் அவளுடைய கண்ணீரை ஒற்றி, அவளை நோக்கி, "மங்கலமான செய்தியைச் சொல்ல, ஏன் அம்மா துக்கங்கொண்டாடுகிறீர்" என்று சொல்லித் தேற்றினுள்.

**மலையிலே விளைந்தாலும் உரலிலே வந்துதான் மசியவேண்டும்**

இரஞ்சிதத்தின் தேறுதல் வார்த்தையாற் சஞ்சலம் நீங்கிய இங்கிதம் இராமச்சந்திரனை விநயத்தோடு நோக்கி, "அண்ணு, நீங்கள் என்மீதுபாராட்டிவரும் அன்பையும் எனக்குச் செய்துவரும் உதவிகளையும் என் உயிருள்ள பரியந்தம் மறக்கமாட்டேன்.


"உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா
உடன்பிறந்தே சொல்லும் வியாதி— உடன்பிறவா
மாமலையிலுள்ள மருந்தேபிணி தீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு."

அண்ணு, அம்மருந்து போலவே நீங்கள் எனக்குத் தமயனுக வந்து வாய்த்தீர்கள்; இது நான் பூர்வத்திற் செய்த புண்ணியத்தின் பயன் போலும்; முதல் ஆண்டவன், இரண்டாவது உங்கள் உதவியால் நான் ஒரு மரியாதைக்குரிய உத்தியோகத்தையும் பெற்றுக்கொண்டேன்; நான் ஏற்ற கடமையை இயன்றவரையில் மனப்பூர்வமான விசுவாசத்தோடு செய்ய எண்ணியிருக்கிறேன் மேலும் உங்களைப்போன்ற ஒரு அண்ணன், இந்த இரஞ்சித அக்காளைப் போன்ற ஒரு சகோதரம், பெரிய ஐயாவைப் போன்ற ஒருதகப்பனுர், விசாலாட்சியக்காள் அவருடைய கணவர்போன்ற உற்றூர் எனக்கு இல்லாவிட்டாலல்லவோ நான் தாவிப்படரக் கொழுகொம்பில்லாத தனிக் கொடிபோலாவேன்? எனக்கு ஒரு குறையுமில்லை அண்ணு! இல்லறத்திற் புகப் பயப்படுகிறே"னென்று கல்லுங்கரையும்வண்ணங் கரைந்தாள்; கேட்ட இராமச்சந்திரனும் சற்றுநேரம் சொல்வதின்னதென்றறியாமல் தியங்கினுன்; அயலே நின்ற இரஞ்சிதமும் அவளுக்குச் சமாதானஞ் சொல்ல வகையறியாது சிந்தனையோடு காணப்பட்டாள்; உடனே இராமச்சந்திரன் தன் மனத்தை யொருவாறு திடப்படுத்திக்கொண்டு இங்கிதத்தை அன்புடன் நோக்கி, 'அம்மா, இங்கிதம் உத்தியோகத்தில் நீர் இருப்பது உமக்கும் எங்களுக்கும் பெருமைதான்; அவ்வளவோடமையாது உத்தியோகம் ஒருவருடைய வாழ்க்கைக்கு ஆதாரமாயுள்ளதென்பது நிசம்; ஆண்பாலரெனின்—என்னைப்போன்றஆண்களெனின் தமக்குக்கிடைந்த உத்தியோகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு தம் வாழ்நாளை ஒருவாறு கழித்தலும் இயலும்; ஆனுல என் அருமைத் தங்காய்! உங்களைப் போன்ற பெண்பாலினர் "மலையிலே விளைந்தாலும் உரலிலேதான் வந்து மசியவேண்டும்" என்றபடி எவ்வளவு அதிகாரத்தோடு கூடிய உத்தியோகத்தை வகித்திருந்தாலும் விவாகமின்றி ஒன்றியாயிருத்தல்முடியாது: தங்காய் பெண்ணரசிகளும் மணஞ் [illegible]தான் இராசிய பரி[illegible]தார்களென்பதை நீர் புராண இதிகாசக் கதைகளிற் படிக்கவில்லையா? நெடுந்தூரம் போவானேன்; பிருத்தானிய சக்கிரவர்த்தினியாகவிளங்கியவிக்ரோறியாச் சிமாட்டியும் விவாகஞ் செய்துகொண்டு தானே உலகாண்டாள்;

**தானகவந்த சீதேவியைத் தள்ளலாகுமா?**

ஆனதால், தங்காய், நான் சொல்வதை இன்னும் சிந்தித்துப் பாரும்; மேலும், நீர் வித்தியாசாலையில் உத்தியோகம் பெற்றதே இப்பொழுது உமக்கு மாருக விளைந்திருக்கின்றது" என்று சொல்ல, இங்கிதம் திடுக்குற்று, 'அங்கே என்ன தவறு செய்தேன் அண்ணு" என்று ஏக்கத்துடன் கேட்க, "தங்காய், நீராகப் புத்திபூர்வமாகவேனும், அபுத்திபூர்வமாகவேனுஞ் செய்த தவறுென்றுமில்லை; ஆனுல் உம்மிடத்திற் குடிகொண்டுள்ள பேரழகும், கல்வியறிவொழுக்கங்களும், இன்சொல்லும் இதமானவூடாட்டமும், இசை, நாட்டியமென்னு மிவற்றிற் பயிற்சியும், இவற்றை நீர் பிள்ளைகட்கு ஊட்டும் திறமையுமாகிய எல்லாஞ் சேர்ந்து உம்முடைய எண்ணத்திற்கு மாருக உம்மைத் தமக்கு வாழ்க்கைத் துணையாசக் கொள்ளும்படி உங்கள் தலைமையாசிரியரைத் தூண்டிவிட்டன; அதனுல் அவர் ஆசை வெட்கமறியா தென்றபடி தாமாகவே தமக்கு மணம்பேசி இன்று என்னிடம் வந்தார்; இதுதான் உண்மையம்மா, நீராக நானுக ஏதும் பிழை செய்யவில்லை" என்று சிரித்தபடி சொன்னுன். கேட்ட இங்கிதம் நாணத்தாற் சாம்பியவளாய்த் தன் கால் விரல்களை நோக்கிய வண்ணம் சற்றுநேரம் மௌனமாய் நின்றுள்; இவற்றைக் கேட்டுக்கொண்ட இரஞ்சிதம் மகிழ்ச்சியடைந்தாள்; பின்னர் இங்கிதம இரஞ்சிதத்தைப் பார்க்க, அவள் "தானுக வந்த சீதேவியைத் தள்ளுவாரு முண்டா? இனி நீர்தாமே அந்த வித்தியாசாலையில் தலைமை யாசிரியை" என்று முறுவலரும்பப் புகலுதலும், "அக்கா, உங்களுக்கு எந்த நேரமும் வேடிக்கை வார்த்தைதான்" என்று இங்கிதம் பூங்கொம்பென ஒல்கி நிற்றலும், இராமச்சந்திரன் அவளை நோக்கி "ஏன், அம்மா, பதிலொன்றுஞ் சொல்லாது நிற்கிறீர்" என்று இதமாகக் கேட்டான். "பதில் கேட்பானேன்; தங்கையின் முகத்தைப் பார்த்தால் விளங்குமே சம்மதமும் சம்மதமில்லாமையும்" என்று புன்னகை பூக்க, இங்கிதத்தின் முகத்தை நோக்கியபடி சொன்னுள் இரஞ்சிதம்; "என்றுலும், கானுருந் தெரியற் கடவுளருங் காண்பரோ — மானுர் விழியார் மனம்" என்ற பிரகாரம் பெண்களின் உள்ளக் கிடக்கையைத் தெய்வத்தினுலும் உணரமுடியா தென்றுல், சிற்றறிவுடைய ஆண்களாகிய நாங்கள் எப்படி யறிவது" என்று வேடிக்கையாகப் பதில் சொன்னுன் இராமச்சந்திரன்; அதனுற்றுன்போலும் ஆண்களெல்லாரும் பெண்களை மணஞ் செய்யாமல் நம்பாமற் புறக்கணிக்கிறூர்கள்" என்று குறிப்பு மொழியாக இரஞ்சிதஞ் சொல்ல, இராமச்சந்திரன் வெள்கினுன்; இவ்வாருக இங்கிதம் இராமச்சந்திரனைப் பார்த்து "அண்ணு, இந்த இரஞ்சித அக்காவுக்கும், உங்களுக்கும், இங்குள்ள மற்றையவர்களுக்கும் சம்மதமானுல் நான் சம்மதப்படாமல் எப்படி யிருக்கமுடியும்" என்று பணிவுடன் ஒவ்வொரு வார்த்தையாக மொழிந்தாள்; "எங்களெல்லோர்க்கும் சம்மதம் மாத்திரமல்லாமல் மகாசந்தோஷமாகவுமிருக்கும் இந்தச் சம்பந்தம்" என்று இரஞ்சிதஞ் சொல்ல, "இறைவனருளால் நீர் நல்லாயிருப்பீரம்மா" என்றுவாழ்த்தி அவர்களிருவரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு இராமச்சந்திரன் அவ்விடத்தைவிட்டகன்றுன். (வரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எங்கும் கியாதிபெற்ற எமது

ரேடியோ பீடிகளையே

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

எல்லாஊர்களிலும் கிடைக்கும்

மொடேண் ஏஜென்சீஸ்,

சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)



## படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் பரீட்சைக்கும், ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு ஷை நூல் ஆசிரியர் அவர்கள் செய்த பல திருத்தங்களோடு

**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்**

வெளியீடாக அச்சிடப்படுகின்றது.

கூடியசீக்கிரம் வெளிவரும்

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,


# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

## சனி அக் 19

காலை 7.15 கிதாரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 மி கிருஷ்ணசாமி வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 மி ராதா கிருஷ்ணன் பாட்டு 8.30 சித்ரகானம் இசைத்தட்டு 9 முடிவு.

1 மி கிருஷ்ணசாமி வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2 05 சர்வ கலாசாலைகளுக்கு 2.15 மி ராதா கிருஷ்ணன் பாட்டு 2.45 முடிவு.

மாலை 5 தங்கச்குட்டி ரவிவர்மா பாட்டு 5-40 திருவரங்கத்தந்தாதி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 தங்கக்குட்டி ரவிவர்மா பாட்டு 7.15 தென்னிந்திய துறைமுகங்கள் 7-30 தமிழில் செய்திகள் 7.45 சித்தூர் சுப்பிரமணியபிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 டி ஜி சங்கர கோபாலன் புல்லாங்குழல் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 இசைவேளை 10-30 முடிவு.

## ஞாயிறு அக் 20

காலை 71-5 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி எஸ் பாலசுப்பிரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 நாகஸ்வரம் இசைத்தட்டு 8-30 கே வி ராஜாராமய்யர் புல்லாங்குழல் 9 முடிவு,

12 கதம்பம் 12-30 தொடரும் நாடகம் 12-45 கலர்க் குங்குமம் 1 மணியலர் 1-30 ஆங்கிலத்தில் செயதிகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 கலவி ஒலிபரப்பு 2.30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 சங்கரி அம்மாள் வீணை 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-15 ராணுவத்திலிருந்து திரும்பிபவர்களுக்கு வசதிகள் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மதுவிலக்கு 8 சங்கரி அம்மாள் வீணை 8.30 டி எஸ் பாலசுப்பிரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 பண்டிட் ஹரி சங்கர்பிஸ்ரர் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே வி ராஜாராமய்யர் புல்லாங்குழல் 10.30 முடிவு.

## திங்கள் அக் 21

காலை: 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 சமயபுரம் சுந்தரேசபிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8-30 ஏ பாலசுப்பிரமணியம் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஏ பாலசுப்பிரமணியம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 சமயபுரம் சுந்தரேசபிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7.30 தமிழில் செய்திகள் 7.45 கே எஸ் வெங்கடராமையர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 இசைவேளை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9.45 இசைவேளை 10-30 முடிவு.

## செவ்வாய் அக் 22

காலை 7.15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 நாகர்கோயில் எம் எஸ் முத்தப்ப பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 குரல்களக இசைத்தட்டு 8.30 டி கே பக்கிரிசாமிபிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே பக்கிரிசாமிபிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 நாகர்கோயில் எம் எஸ் முத்தப்ப பாகவதர் பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 பி ஜே கோவிந்தன் 7-30 தமிழில் செய்திகள் 7-45 சமாதான அமைப்பில் 8 அது முடியுமா? 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 பாரிஜாதஹரணம் 10-30 முடிவு.

# இலங்கைச் சட்டக்காரியதரிசி

இலங்கைச் சட்டக் காரியதரிசியான மிஸ்ரர் J. H. B. நிஹில் என்பவர் ஆபிரிக்காவில் உள்ள கெனியா நாட்டின் பிரதம நீதியரசராகப் போக, அவர் இடத்துக்கு, இலங்கை உயர்தர நீதிமன்றத்து நீதியரசர்களில் ஒருவரான மிஸ்ரர் ரோஸ் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.


# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)



# தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சிசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 27 26 4-46—25-10-46 (வெ)



# ஜீவாதார வைத்திய விளம்பரம்

நாடிப் பரீட்சையுடன்
3 நாள் 6 வேளை மருந்து 10 ரூபா
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தாஙகள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்தி வரவேணும்.

இங்ஙனம்,

க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)


# நவராத்திரி கும்பம்

(பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்)

ஒவ்வொருவருஷமும் ஆஸ்வயுஜ (புரட்டாசி) மாசத்தில் பூர்வபக்கப் பிரதமை முதல் ஒன்பது இராத்திரிகளில் பராசத்தியைக்குறித்து அநுஷ்டிக்கப்படும் விரதமாகையால் நவராத்திரியென்று பெயர் பெற்றது. பகற்காலம்சிவபெருமானுக்கும் இராக்காலம் பராசத்திக்குமுரிய காலமென்று சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருத்தலால், ஸ்ரீ பராசத்தியின் உபாசனைக்கும் பூசைக்கும் உரிய காலம் இராக்காலமாம். இந்த உபாசனை ஞானத்தினால் 'வித்தை'யோடு அனுஷ்டிக்க வேண்டியதாதலின், வித்தைக் கதிபனாகிய புதனுடைய ஆட்சி மூலத் திரிகோண இராசியாகிய கன்னி ராசியில் சூரியன் வசிக்குங் காலம் சிறப்புடைத்தாம் இவற்றுள் முதல் மூன்று நாளும் துர்க்கையின் அம்சமாகும். இடை மூன்று நாளும் மகாலக்ஷுமியின் அம்சமாகும். கடை மூன்று நாளும் சரசுவதியின் அம்சமாகும். இந்தத் தினமானது தேவர்களை வருத்திய சும்பன், நிசும்பன், மதுகைடபன், மகிஷாசுரன் முதலான அசுரர்களைப் பராசக்தியானவள் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி யென்ற பற்பல சொரூபமாக நின்று சங்கரித்த தினமென்றும் இதனால் பராசத்தியை வழிபடுதற்குரிய சிறந்த விரதநாளாயிற்றென்றும் சாஸ்திரங்கள் கூறும்.

துர்க்கன் என்னும் அசுரனைக் கொன்றவளும், நரகம், துக்கம், யமதண்டனை, சோகம், பயம், பிணி, பிறப்பு முதலியவைகளை நீக்குபவளுமாதலால் இந்தப் பெயரைப் பெற்றனளென்பர். "துர்க்கம் வ்ஙகிரிரூபம் ஆவாஸோ அஸ்யாஸ்ஸா துர்க்கா" என்ற குருபால பிரபோதிகா என்ற வசனத்தில் வருந் துர்க்கங் (காடு மலை)களை இடமாக உடையவளாதலால் துர்க்கையெனப் பெயர் பெற்றவளென்பது சிலர் சம்மதம். இலக்குமி:- உலகத்துயிர்கட்கு வேண்டிய செல்வங்களைக் கொடுத்துவரும் விஷ்ணுவின்சத்தியாவர். எல்லா ஐசுவரியங்களுக்கும் அதிதேவதை "லக்ஷயதே ஸர்வம் அநயேதி லக்ஷமி:" என்பதனால் எல்லாம் இவளால் காணப்படும் ஆகையால் இலட்சுமியென்ற பெயரானது. சரஸ்வதி: சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமனிடத்தில் விளங்கும் சத்தியாகும், வித்தைக்கு அதிதேவதை எங்கும் வியாபியாயிருப்பவளாதலால இப்பெயரைப் பெற்றனள்.

பிரதமையிலன்று ஒரே யொரு கும்பம் வைத்து நடுவே துர்க்கையையும், இடப்பக்கத்தில் இலக்குமியையும் வலப்பக்கத்தில் சரசுவதியையும் ஆவாகித்து ஒன்பது நாளும் பூசித்தல் வேண்டும்; ஒன்பது நாளும் பூசை செய்ய இயலாதவர்கள் கடைமூன்றுநாளும் ஏடு புஸ்தகங்களை வைத்து சரஸ்வதிக்குரிய தியானம் அருச்சனை முதலியவற்றைச்செய்து ஒருபோது போசனஞ் செய்தல் வேண்டும் இந்த மூன்று நாட்களிலும் புஸ்தகங்களிற் படிக்கவும் எழுத்துக்களை எழுதவுங் கூடாது. இத்தினம் சரஸ்வதி பூசையென்றும் ஆயுத பூசையென்றுஞ் சொல்லப்படும்,

நவமித்திதியிற்றான் துர்க்கை, இலட்சுமி சரஸ்வதியை உத்தியாபனஞ் செய்தல் வேண்டும். இதன் விரிவை கல்போக்தமாகவுள்ள பூசாவிதியில் கண்டுகொள்க.

"துர்க்கனைக் கொன்றவாற்றால் துர்க்கையெனப் பெயர் பெற்றாள்"

காசிகண்டம்,


விளம்பரமின்றேல்
பெருப்பணமில்லை


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, October, 18, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org